



புதுக்கோட்டை மேயர் திலகவதி செந்தில் கணவரும், புதுக்கோட்டை மாநகர செயலாளருமான ஆ.செந்தில் அவர்களின் உடலுக்கு கழக முதன்மை செயலாளரும், நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சருமான கே.என்.நேரு நேரில் சென்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, அவரது குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார். உடன் அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப் பாண்டியன், பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப் பித்தன், எம்.எம்.அப்துல்லா எம்.பி, டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, டி.கே.ஜி. நீலமேகம் எம்.எல்.ஏ, த.சந்திரசேகரன், அரு வீரமணி, துணை மேயர் எம். லியாகத் அலி மற்றும் பலர் உள்ளனர்.

# புதுக்கோட்டை மாவட்டம் "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாம்!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி – முனைவர் கோவி.செழியன் – சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் கே.கே.செல்லப்பாண்டியன் துவக்கி வைத்தனர்!

புதுக்கோட்டை .டிச27

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், கிள்ளுக்கோட்டை வருவாய் கிராமத்தில் நடைபெற்ற "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாமில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தலைமையில் மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாமினை பார்வையிட்டு, மக்களிடம் கோரிக்கைகள் குறித்த விவரங்களை கேட்டறிந்து, பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி னார்கள்.

பின்னர் அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்களின் நலனில் மிகுந்த அக்கறைகொண்டு பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், அரசுத் துறைகளை அன்றாடம் அணுகும் பொதுமக்களுக்கு, அரசின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும் அவர்களைச் சென்று .சேரும் வகையில், நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்திடவும், திராவிட மாடல் ஆட்சியின் மற்றுமொரு மைல் கல்லாக "மக்களுடன் முதல்வர்" என்ற புதிய திட்டத்தை மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், நகர்ப்புறங்களை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகளில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 18.12.2023 அன்று தொடங்கி வைத்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, இத்திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 11.07.2024 அன்று ஊரகப் பகுதிகளுக்கும் விரிவுப்படுத்தி தொடங்கி வைத்தார்கள். இந்நிலையில், புதுக்கோட்டை மாவட்டத்தில் 11.07.2024 முதல் 10.09.2024 வரை 13 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 495 கிராம ஊராட்சிகளில் 66 "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாம்கள் நடத்தப்பட்டது. அதன்படி, குளத்தூர் வட்டம், கிள்ளுக்கோட்டை வருவாய் கிராமத்தில் நடைபெற்ற "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாம் நேரில் பார்வையிட்டு, பயனாளிகளுக்கு வீட்டு மனைப் பட்டாக்களுக்கான ஆணைகளும், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட அட்டைகளும், "கலைஞரின் கனவு இல்லம்" திட்டத்தின்கீழ் வீடு கட்டுவதற்கான ஆணையினையும், மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரணங்களும் வழங்கப்பட்டது.

இம்முகாம்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, கூட்டுறவுத்துறை, எரிசக்தித் துறை உள்ளிட்ட பல்வேறு 15 அரசுத் துறைகள் சார்ந்த 44 சேவைகள் வழங்கப்படுகிறது. இம்முகாம்களில் பெறப்பட்ட அனைத்து மனுக்களும் சம்பந்தப்பட்ட துறைகளால் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியின் அடிப்படையில் உரிய சேவைகள் வழங்கப்பட்டு தீர்வு காணப்படுகிறது.

மேலும்,கிள்ளுக்கோட்டை கிராமத்தில், கலைஞரின் கனவு இல்லம் திட்டம், ஊரக வீடுகள் பழுது நீக்கம் திட்டம், முதல்வரின் கிராம சாலைகள் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் ஆதிதிராவிடர் காலனி வீடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 142 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

எனவே பொதுமக்கள் அனைவரும் இந்த முகாமினை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

பின்னர், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு பல்வேறு மக்கள்நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில், அரசின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும் பொதுமக்களுக்கு சென்றுசேரும் வகையில் "மக்களுடன் முதல்வர்" என்ற புதிய திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இத்திட்டத்தின் மூலம் மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊரக பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு அரசின் சேவைகள் சென்றடையும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இம்முகாமில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப் ப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை, கூட்டுறவுத் துறை, எரிசக்தித் துறை, உள் மதுவிளக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை (கலால்), தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, வேளாண்மை உழவர் நலத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை உள்ளிட்ட 15 அரசுத் துறைகள் சார்ந்த 44 சேவைகள் வழங்கப்படுகிறது.

எனவே பொதுமக்கள் அனைவரும் தங்களது அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்திடும் வகையில், இம்முகாம்களை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்தார்.

பின்னர் பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான தமிழக அரசின் நலத்திட்டங்களை பொதுமக்களுக்கு விரைவாகவும், எளிதாகவும் கொண்டு சேர்த்திடும் வகையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் "மக்களுடன் முதல்வர் " என்ற புதிய திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 18.12.2023 அன்று தொடங்கி வைத்தார்கள்.

இத்திட்டத்தின் மூலம், 15 அரசுத்துறைகளை சார்ந்த சேவைகள் ஒரே இடத்தில் வழங்கப்படுகிறது. இதன்மூலம் பொதுமக்கள் அனைவரும் பல்வேறு இடங்களுக்குச் சென்று அரசு சேவைகளை பெறுவது தவிர்க்கப்பட்டு, ஒரே இடத்தில் அரசு சேவைகளை பெரும் வசதி ஏற்படுத்தப் பட்டுள்ளது. பொதுமக்களுக்காக செயல்படுத்தப்படும் இம்முகாம்களின் மூலம் அரசு அலுவலர்கள் தமிழக அரசின் சேவைகளை பொது மக்களிடம் விரைவாக கொண்டு சேர்த்திடும் வகையில் பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப் பட்டுள்ளது.

எனவே, தமிழக அரசின் இந்த நல்வாய்ப்பினை அனைத்து பொது மக்களும் உரிய முறையில் பயன்படுத்தி தங்களது பொருளாதாரத்தினை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம். சின்னத்துரை,

மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ஜெயலட்சுமி தமிழ்செல்வன், துணை மேயர் எம்.லியாகத் அலி, இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் அ.அக்பர் அலி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) அ.ஷோபா, குன்றாண்டார் கோவில் ஒன்றிய குழுத் தலைவர் பாண்டிச்செல்வி கே.ஆர்.என்.போஸ், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் த.சந்திரசேகரன், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் துவாரை டி.செல்வம், கை. பழனிச்சாமி, குளத்தூர் வட்டாட்சியர் கவியரசன், வட்டார வளர்ச்சி அலுவலர் கோகுலகிருஷ்ணன், ஊராட்சிமன்றத் தலைவர் (கிள்ளுக்கோட்டை) மேகலா அறிவானந்தம், முன்னாள் ஒன்றியக்குழுத் தலைவர் என்.சேட் மற்றும் , க.மதியழகன், சுப.சரவணன், சு.சண்முகம்,

கே.ஆர்.என்.போஸ், செ. அசோக்பாண்டியன், மு.க. ராமகிருஷ்ணன், சி.சண்முகம், எம்.எம்.பாலு, டாக்டர் செ.குறிஞ்சி வாணன், புத்தாம்பூர் எம்.சுப்பையா, சி.அரங்கநாயகம், டி. அப்புக்காளை, வடவாளம் க.செ.மணிமாறன், பி.கே.வெங்கடேஷ், தாயினிப்பட்டி கண்ணன்,

உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



திருவாரூரில் திமுக சிறுபான்மை நல உரிமைப்பிரிவு சார்பில் கிறிஸ்துமஸ் விழா நடைபெற்றது . மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. பங்கேற்று கிறிஸ்தவ மக்களுக்கு வாழ்த்துக்களை பரிமாறியதோடு இனிப்புக்களை வழங்கினார். மாவட்ட ஊராட்சி துணைத்தலைவர் சேகர் கலியபெருமாள், ஒன்றியக்குழு தலைவர் புலிவலம் ஏ.தேவா, நகர செயலாளர் வாரை எஸ்.பிரகாஷ், திட்டக்குழு உறுப்பினர் இரா.சங்கர், மாவட்ட சிறுபான்மை நல உரிமைப்பிரிவு அமைப்பாளர் எம்.ஐ.தாஜுதீன், துணை தலைவர் செபேஷ்ரோலி, நாகங்குடி அமீன், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மீனாட்சி சூர்யபிரகாஷ், ராஜ் கருணாநிதி, தினேஷ் ,நகரபொருளாளர் ரஜினிசின்னா மற்றும் கழக நிர்வாகிகள் உடன் பங்கேற்றனர்.



நாகை மாவட்டம் திருமருகல் தெற்கு ஒன்றியம் பில்லாளியில் கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா கொடி ஏற்று நிகழ்ச்சியில் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் உரையாற்றினார். உடன் ஒன்றியக் கழகச் செயலாளர் ஆர்.டி.எஸ்.சரவணன், மாவட்ட துணைச் செயலாளர் ஆரூர்மணிவண்ணன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பி.என்.கார்த்தி, ஒன்றியக் கழக துணைச் செயலாளர் துரையரசன், பொருளாளர் கலியமூர்த்தி மற்றும் பலர் உள்ளனர்.

### மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதம சிகாமணி தலைமையில்

# விழுப்புரத்தில் தந்தை பெரியார் நினைவு நாள் அமைதி பேரணி!

## வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி மாலை அணிவித்து மரியாதை!

விழுப்புரம், டிச. 27-

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 51 வது நினைவு நாளை முன்னிட்டு விழுப்புரம் தெற்கு மாவட்ட திமுக சார்பில் மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி தலைமையில் விழுப்புரம் நகர கழக அலுவலகத்தில் இருந்து அமைதிப் பேரணியாக சென்று அவரின் திருவுருவச் சிலைக்கு வனத் துறை அமைச்சர் முனைவர் பொன்முடி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் அ.சிவா, டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ் மாநில ஆதிதிராவிடர் நலக் குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ் , மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் மு.தங்கம், மாவட்ட துணை செயலாளர்கள் டி.என்.முருகன், தயா.இளந்திரையன், இரா.கற்பகம் , தலைமைக் கழக வழக்கறிஞர் சுவை சுரேஷ், மகளிர் அணி பிரச்சார குழுச் செயலாளர் எம் தேன்மொழி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கோ.பாஸ்கரன், அப்துல் சலாம், நகரச் செயலாளர் இரா.சக்கரை, நகர மன்றத் தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு, துணைத் தலைவர் சித்திக் அலி, தொமுச சேகர், நிர்வாக பணியாளர் வாலிபால் மணி,

பொதுக்குழு உறுப்பினர்கள் பஞ்சநாதன், டி. என்.ஜெ.சம்பத், காடு வெட்டி ஏழுமலை, ராஜசேகர், ஒன்றியச் செயலாளர்கள் க.மும்மூர்த்தி, பி.தெய்வசிகாமணி, தே முருகவேல், கல்பட்டு வி.ராஜா, விஜி பிரபாகரன், ஜி.ரவிச்சந்திரன், அ.சா.ஏ பிரபு , பி.வி.ஆர்.சு.விசுவநாதன், பி.கே.டி.முரளி, கிளியனூர் ராஜி, மைதிலி ராஜேந்திரன், ஜெய.ரவி துரை, வேம்பி ஜெ.ரவி ஜெ.ஜெயபால், வே.கணேசன், கு.செல்வமணி, ஆர் முருகன், ஆர்.பி.முருகன் லூயிஸ், நகரச் செயலாளர்கள் ஜெயமூர்த்தி, கோபிகிருஷ்ணன், பேரூர் செயலாளர்கள் பா.ஜீவா, நைனா முகமது , பூக்கடை கணேசன், ஒன்றிய குழுத் தலைவர்கள் சச்சிதானந்தம், ஓம் சிவசக்திவேல்,, இளைஞர் அணி அமைப்பாளர் செ.தினகரன் உள்ளிட்ட ஒன்றிய , நகர, பேரூர், நிர்வாகிகள் , அணி நிர்வாகிகள் , மகளிர் அணி நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

### சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு சார்பில்

# திருவாரூரில் கிறிஸ்துமஸ் விழா!

## பூண்டி.கே.கலைவாணன் பங்கேற்று இனிப்புகள் வழங்கினார்!

திருவாரூர்,டிச27 -

திருவாரூரில் திமுக சிறுபான்மை நல உரிமைப்பிரிவு அணி சார்பில் கிறிஸ்துமஸ் விழா எழுச்சியோடு நடைபெற்றது . மாவட்ட சிறுபான்மை நல உரிமைப்பிரிவு நிர்வாகிகள் சார்பில் நடைபெற்ற இந்த விழாவில் மாவட்ட செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம். எல்.ஏ.பங்கேற்று கிறிஸ்தவ மக்களுக்கு வாழ்த்துக்களை பரிமாறியதோடு இனிப்புக்களை வழங்கினார். மாவட்ட அமைப்பாளர் எம்.ஐ.தாஜுதீன், துணை தலைவர் செபேஷ்ரோலி, நாகங்குடி அமீன் மற்றும் நிர்வாகிகள் உடன் பங்கேற்றனர்.

திருவாரூர் புனித ஆர். சி.பாத்திமா தேவாலயம் மக்கள் மன்றத்தில் திருவாரூர் மாவட்ட திமுக சிறுபான்மை நல உரிமைப்பிரிவு சார்பில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவில் கிறிஸ்தவ முறைப்படி சிறப்பு திருப்பலி நடைபெற்றது. ஏராளமான கிறிஸ்தவ மக்கள் பங்கேற்ற இந்த திருப்பலியோடு,திருவாரூர் மாவட்ட திமுக சிறுபான்மை நல உரிமைப்பிரிவு சார்பில் பிரமாண்ட கேக் தயாரிக்கப்பட்டு, அதனை மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. மற்றும் பங்குத்தந்தை ஜெரால்ட் ஆகியோர் கேக்கினை வெட்டி வாழ்த்துக்களை பரிமாறிக்கொண்டனர்.

பின்னர்திருப்பலியின் நிறைவில் கிறிஸ்தவ மக்கள் அனைவருக்கும் மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. இனிப்புக்களை வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

இந்த சிறப்பு நிகழ்வில் மாவட்ட ஊராட்சி துணை தலைவர் சேகர் கலியபெருமாள், ஒன்றிய தலைவர் புலிவலம் ஏ.தேவா, நகர செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ், திட்டக்குழு உறுப்பினர் இரா.சங்கர் ,மாவட்ட அமைப்பாளர் எம்.ஐ. தாஜுதீன், துணை செயலாளர் செபேஷ்ரோலி , துணை அமைப்பாளர் நாகங்குடி அமீன் , மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் மீனாட்சி சூர்யா பிரகாஷ்,ராஜ் என்கிற கருணாநிதி , தினேஷ்,நகர பொருளாளர் ரஜினி சின்னா ,நகர்மன்ற உறுப்பினர் வரதராஜன் ,திருவாரூர் நகர சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர்கள் அப்துல் ரஷீது, அமீர் அலி, அப்துல் ரஹ்மான், ஜெகபர்தீன், முகமது தௌபீக்,யாசர் அரபாத், கூத்தாநல்லூர் அமைப்பாளர்கள் ஜெகபர்தீன், ஷர்புதீன், செபஸ்டின், ஹாஜா மைதீன், அமலதாஸ், லாரன்ஸ்மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரத்தில் 14.12.2024 கனமழையில் வடிகால் வாய்க்காலில் தவறி விழுந்து இறந்த தர்ஷின் என்ற குழந்தையின் பெற்றோர்க்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க மாநில பேரிடர் நிதியிலிருந்து நான்கு லட்சத்தை ச.முரசொலி எம்.பி. வழங்கினார். உடன் என்.அசோக்குமார் எம்.எல்.ஏ, மாவட்ட வருவாய் அலுவலர் ரெ.தியாகராஜன், திட்ட இயக்குனர் பாலகணேஷ் ஆகியோர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கடலாடி அ. பிரணவநாதன்
### டிசம்பர் 27 (2010)



இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி ஒன்றியக் கழகச் செயலாளராக இருபது ஆண்டுகள் பணியாற்றியவர்.

ஒரு முறை மாவட்ட துணைச் செயலாளராகவும், இரண்டு முறை தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

கடலாடி சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு, வெற்றிபெற்று அந்தத் தொகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**